சென்னை திருப்பதி திருக்குடை ஊர்வலப் பாதுகாப்புப் பணியிலிருந்த

# கொரட்டூர் காவல் ஆய்வாளர் உயிரிழப்பு - இரங்கல் - குடும்பத்திற்கு ரூ.25 இலட்சம் நிதி உதவி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, அக்.5-

**சென்னை திருப்பதி திருக்குடை ஊர்வலத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது உயிரிழந்த கொரட்டூர் காவல் ஆய்வாளரின் குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்ததுடன் நிதியுதவி வழங்கிடவும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வருமாறு:-

சென்னை, கொரட்டூர் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு காவல் ஆய்வாளராக பணியாற்றிவந்த முத்துகுமார் (வயது 47) என்பவர் நேற்று (04.10.2024) சென்னையில் நடைபெற்ற திருப்பதி திருக்குடை ஊர்வலத்தில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தபோது திடீரென்று மயக்கம் ஏற்பட்டு உடனடியாக சென்னை, முகப்பேரிலுள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் பிற்பகல் 01.15 மணியளவில் மாரடைப்பு காரணமாக சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும், வேதனையுமடைந்தேன்.

காவல் ஆய்வாளர் திரு. முத்துகுமார் அவர்களின் உயிரிழப்பு தமிழ்நாடு காவல்துறைக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

காவல் ஆய்வாளர் திரு.முத்துகுமார் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், அவரது உறவினர்கள் மற்றும் அவருடன் பணிபுரிபவர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, அவரது குடும்பத்தினருக்கு இருபத்தைந்து இலட்சம் ரூபாய் நிவாரண நிதி வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில்

# உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்!

## அமைச்சர் கே.என்.நேரு ஆய்வு!

சென்னை, அக்.5-

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகள், சென்னைக் குடிநீர் வாரியத்தின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாடுகள் மற்றும் புனரமைக்கப்பட்ட மெரினா நீச்சல் குளம் ஆகியவற்றினை நேற்று (04.10.2024) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர், தண்டையார்பேட்டை மண்டலத்திற்குட்பட்ட கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் நீண்ட நாட்களாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை உயிரி அகழ்ந்தெடுத்தல் முறையில் பிரித்தெடுத்து மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகத்தில் பல ஆண்டுகளாக கொட்டப்பட்டுள்ள குப்பைகளை ரூ.648.38 கோடி மதிப்பில் உயிரி அகழ்ந்தெடுத்தல் (Bio Mining) முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணி முதலமைச்சர் அவர்களால் 24.02.2024 அன்று தொடங்கி வைக்கப்பட்டு, திடக்கழிவு மேலாண்மைப் பணிகள் நடைபெற்று வருகிறது.

கொடுங்கையூர் குப்பை கொட்டும் வளாகம் சுமார் 80 ஆண்டுகளுக்கு முந்தைய காலத்திலிருந்து குப்பை கொட்டும் இடமாக பயன்பாட்டில் இருந்து வருகிறது. மண்டலம் 1 முதல் 8 வரையிலான பகுதிகளில் சேகரிக்கப்பட்டு வரும் திடக்கழிவுகள் இந்த வளாகத்தில் கொட்டப்பட்டு வருகிறது. இந்த வளாகத்தில் மார்ச் 2022ஆம் ஆண்டு ட்ரோன் சர்வே மூலம் கணக்கெடுப்பு நடத்தப்பட்டு, 252 ஏக்கர் நிலப்பரப்பில் 66.52 இலட்சம் டன் பழைய திடக்கழிவுகள் கொட்டப்பட்டுள்ளதாக மதிப்பிடப்பட்டு, பயோமைனிங் முறையில் பிரித்தெடுத்து நிலத்தை மீட்டெடுக்கும் பணி நடைபெற்று வருகிறது. இதனைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் இப்பணியினை சிறப்பாக மேற்கொண்டு நிர்ணயிக்கப்பட்ட கால அளவிற்குள் முடித்து நிலத்தை மீட்டெடுக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், குப்பைகளிலிருந்து மின்சாரம் தயாரிப்பதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் குறித்தும், அதற்கான இடத்தினைத் தேர்வு செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும் அமைச்சர் அவர்கள் கேட்டறிந்து ஆய்வு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் அவர்கள் சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியத்தின் சார்பில், தொழிற்சாலைகள் மற்றும் குடிநீர் தவிர பிற உபயோகப் பயன்பாட்டிற்காக கொடுங்கையூர் பகுதியில் நாளொன்றுக்கு 45 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட எதிர் சவ்வூடு பரவுதல் முறையில் அமைக்கப்பட்டுள்ள மூன்றாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, சுத்திகரிக்கப்பட்ட நீரினைப் பரிசோதித்துப் பார்த்தார்.

பின்னர், நாளொன்றுக்கு 120 மில்லியன் லிட்டர் கொள்ளளவு திறன் கொண்ட தொடர் தொகுதி உலை முறையில் அமைக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தின் செயல்பாட்டினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ரூ.1.20 கோடி மதிப்பில் மெரினா கடற்கரை நீச்சல் குளம் புனரமைக்கப்பட்டு பயன்பாட்டிற்குத் தயார்நிலையில் உள்ளதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வுகளின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, பெரம்பூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.டி.சேகர், துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி.ஜெய சந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ.சாந்தகுமாரி, மண்டலக் குழுத் தலைவர் நேதாஜி யு. கணேசன், துணை ஆணையாளர்கள் வி.சிவகிருஷ்ணமூர்த்தி, (பணிகள்), கட்டா ரவி தேஜா, (வடக்கு வட்டாரம்), கே.ஜெ.பிரவீன் குமார், (மத்திய வட்டாரம்), சென்னைக் குடிநீர் வாரிய செயல் இயக்குநர் செ.சரவணன் மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

ஜெ.நடராஜன் - துர்காதேவி நடராஜன் தலைமை! 500 நபர்களுக்கு

# முதலமைச்சர் காப்பீட்டு அட்டை! அமைச்சர் தா.மோ. அன்பரசன் வழங்குகிறார்!

## பகுதிச் செயலாளர் என்.சந்திரன் முன்னிலை!

சென்னை, அக்.5

காஞ்சி வடக்கு மாவட்டம், ஆலந்தூர் தெற்கு பகுதி, இன்று 05.10.2024 மாலை 4 மணியளவில் 100 அடி சாலையில் அமைந்துள்ள என்.வி.ஆர் திருமண மண்டபத்தில் (நம்மாழ்வார் கெஸ்ட் ஹவுஸ்) நடைபெறும் மருத்துவ காப்பீட்டு அட்டை வழங்கும் விழாவிற்கு, 167 வது வட்ட கழக செயலாளர் ஜெ. நடராஜன், 167-வது மாமன்ற உறுப்பினர் துர்காதேவி நடராஜன், தலைமையிலும், ஆலந்தூர் தெற்கு பகுதி கழக செயலாளரும், 12-வது மண்டலகுழு தலைவருமான, என்.சந்திரன் முன்னிலையில் முதலமைச்சரின் விரிவான காப்பீட்டு அட்டை 500 நபர்களுக்கு குறு- சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் துறை அமைச்சரும், காஞ்சி வடக்கு மாவட்ட கழக செயலாளருமான, அமைச்சர் தா. மோ.அன்பரசன் வழங்குகிறார்.

ஆலந்தூர் தெற்கு பகுதிக்கு உட்பட்ட பொதுக்குழு உறுப்பினர், வட்ட கழக செயலாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், பகுதி கழக நிர்வாகிகள், மாவட்ட,பகுதி, வட்ட, அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.



முன்னாள் துணை பொதுச்செயலாளரும் முன்னாள் அமைச்சரும் கழக ஆதிதிராவிடர் நலக்குழு அணி தலைவருமான மறைந்த க.சுந்தரம் திருவுருவப்படத்தை மாவட்ட கழகச் செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் ஆதிதிராவிடர் நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ, துவக்க உரையில் மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு.தமிழ்உதயன் ஏற்பாட்டில் கழக முதன்மைச் செயலாளர் அமைச்சர் கே.என்.நேரு, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழும் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில் திருவுருவப்படத்தை திறந்து வைத்து புகழஞ்சலி செலுத்தி அமைக்கப்பட்டுள்ள க.சுந்தரத்தின் வாழ்க்கை வரலாறு கண்காட்சியை பார்வையிட்டார். உடன் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி, அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.காந்தி, சி.வி.கணேசன், எம்.மதிவேந்தன், இரா.கிரிராஜன் எம்.பி, எர்ணாவூர் நாராயணன், திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, துரை சந்திரசேகரன் எம்.எல்.ஏ, கே.பி.பி.சங்கர் எம்.எல்.ஏ, சென்னை துணை மேயர் மகேஷ், இ.ஏ.பி.சிவாஜி, விபி.ராசன், திப்பம்பட்டி ஆறுசாமி, சா.ராஜேந்திரன், கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, அன்புவண்ணன், மு.பகலவன், மா.ராஜ், மு.கதிரவன், எஸ்.ரமேஷ், கே.சுப்பிரமணி, பரிமளம் விஸ்வநாதன், பா.செ.குணசேகரன், குடும்பத்தினர் எழிலினி சுந்தரம், டாக்டர் க.சு.செந்தில்ராஜ்குமார், பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் க.சு.தமிழ்பிரியன் உள்பட பலர் உள்ளனர்.

# மக்களுக்காக ஓடி உழைத்துக் கொண்டிருக்கும் தமிழ்நாடு துணை முதலமைச்சரும் சனாதனம் பேசி நேரத்தை வீணடிக்கும் ஆந்திர துணை முதலமைச்சரும்!

சனாதனத்தை எதிர்த்துப் பேசிய தமிழ்நாட்டின் துணை முதலமைச்சரை அது வீழ்த்திவிடும் என்று ஆந்திராவின் துணை முதலமைச்சர் பேசியிருக்கின்றார்..!

நம்ம துணை முதலமைச்சரிடம் இது பற்றிக் கேட்டால்... அவரோ வெய்ட் அண்ட் ஸீ என்று சொல்லிவிட்டு அடுத்த வேலையைப் பார்க்க கிளம்பிவிட்டார்..!

ஆனால் ஆந்திர துணை முதல்வர் பவன்கல்யாண் கடந்த பத்து நாட்களாக என்ன செய்து கொண்டிருக்கின்றார் என்று கொஞ்சம் அங்கே போய் பார்த்தால்...

திருப்பதி லட்டில் மாட்டுக் கொழுப்பு கலந்திருக்குன்னு அவங்களே கௌப்பி விட்ட ஒரு தில்லாலங்கடி செய்தியை தலைமேல் தூக்கி வைத்துக் கொண்டு...

அதற்கான ஒன்பது நாட்கள் விரதமிருந்து... நடந்து திருப்பதி மலையேறி... அதன் படிக்கட்டுக்களுக்கு அபிஷேகம் ஆராதனை எல்லாம் செய்து... மாட்டு மூத்திரத்தை தெளித்துக் கொண்டு....

கடந்த இரண்டு வாரங்களாக இதே வேலையாகத் தான் முழு நேரமும் அலைந்து கொண்டிருக்கின்றார்...!

ஆனால் நம் தமிழ்நாட்டின் துணை முதலமைச்சரோ...

தனக்கு அந்த பதவி அறிவிக்கப்பட்ட செப்டம்பர் 28 ஆம் தேதி... அது பதவி அல்ல... அது தனக்கு அளிக்கப்



பட்ட பொறுப்பு... அண்ணா வழியில், கலைஞர் வழையில், தளபதியார் வழியில் சிறப்பாக செயல்பட்டு மக்களிடம் நன் மதிப்பைப் பெற உழைப்பேன் என்று கூறி விட்டு...

அடுத்த நாள் அதாவது செப் 29.. வாழ்த்துப் பெற வேண்டியவர்களிடம் வாழ்த்துப் பெறுகின்றார்... ஆளுநர் மாளிகை சென்று பொறுப்பேற்றுக் கொள்கிறார். அடுத்தநாள் செப் 30... முதலமைச்சர் கூட்டிய, மழைக் காலபேரிடர்மேலாண்மைபாதுகாப்புமுன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்தான அமைச்சரவைக் கூட்டத்தில் பங்கேற்று...

இடையிடையே தன்னை சந்திக்க வரும் தொண்டர்களிடம் வாழ்த்துக்களைப் பெறுகின்றார்... அவர்களின் கூட்டம் கட்டுக்கடங்காமல் செல்லவே... தன்னுடைய மக்கள் பணிக்கு தடங்கல், தாமதம் ஏற்படுமே என்று எண்ணி, தொண்டர்கள் யாரும் தன்னைப் பார்த்து வாழ்த்துச் சொல்ல வரவேண்டாம்... நானே உங்கள் அனைவரையும் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் மேற்கொண்டு சந்திக்கின்றேன் என்று அறிக்கை விட்டுவிட்டு...



**சௌமியன் வைத்தியநாதன்**
அமைப்பாளர்,
மயிலாடுதுறை மாவட்ட
தி.மு.க. சுற்றுச்சூழல் அணி

அடுத்த நாள்... அதாவது அக்டோபர் 1ஆம் தேதி மதுரை சென்று, விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகள், ஆய்வுகள் மற்றும் நலத் திட்ட உதவிகள் மற்றும் திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி, விருதுநகர் மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களின் 1300 ஊராட்சி மன்றங்களுக்கு... அந்தந்த ஊராட்சியில் உள்ள இளைஞர் விளையாடும் 33 விளையாட்டுக்களுக்கான 2000 கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கி... பரிசுகளும் வழங்குகிறார்..!

முழுக்க முழுக்க முழுக்க... ஒரு நாள் முழுவதும் அடித்தட்டு மக்களோடும், மகளிரோடும், இளைஞர்களோடும் அவர்களுடனே அவர்களுக்காகவே அங்கே கடமை ஆற்றிவிட்டு...

அடுத்த நாள்... அதாவது அக்டோபர் 2ஆம் தேதி



சென்னை வந்து காந்தியடிகளுக்கு நினைவஞ்சலி செலுத்தி விட்டு... இரண்டு கழக நிகழ்ச்சிகளில் பங்கேற்று... பிறகு தனக்கு துறை செயலாளராக நியமிக்கப்பட்ட பிரதீப் ஐ ஏ எஸ் அவர்களுக்கு வாழ்த்துச் சொல்லி விட்டு... அவருடன் துறை ரீதியிலான அனைத்து விவரங்களையும் எப்படி எப்படி நடைபெற வேண்டும் என்று ஆலோசனை செய்து... ஹூஃப்...

அடுத்த நாள்... அதாவது அக்டோபர் 3ஆம் தேதி... கழகத் தலைவர் தனக்கு அளித்திட்ட கழகப் பணியின் பொருட்டு... தகவல் தொழில்நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணி, விளையாட்டு மேம்பாட்டு அணி என்று ஒவ்வொரு அணியாக அழைத்து அவர்களிடம் ஆலோசனை மேற்கொண்டு... அவர்களுக்கான தேர்தல் பணிகளை எடுத்துச் சொல்லி...

அடுத்த நாள்... அதாவது அக்டோபர் 4ஆம் தேதி... அதாவது இன்றைக்கு... தமிழ்நாட்டு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு பல்கலைக் கழகத்தின் ஆண்டு பட்டமளிப்பு விழாவில் ஆளுநரோடு கலந்து கொண்டு மாணவர்களுக்கு பட்டங்கள் வழங்கி... அறிவுரைகள் சொல்லி...

நேரு உள்விளையாட்டு அரங்கம் சென்று... முதலமைச்சர் கோப்பைக்கான மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகளை துவங்கி வைத்து விட்டு...

பருவமழை முன்னெச்சரிக்கைக்கான ஏற்பாடுகள் தொடர்பாக மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு செய்து, மழை அளவீட்டுக்கான நவீன கருவிகள் - ஏற்பாடுகள், மழை குறித்தத் தகவல்களை உடனுக்குடன் மக்களுக்குத் தெரிவிப்பதற்கான கட்டுப்பாட்டு அறை - தமிழ்நாடெங்கும் மழைப்பொழிவினை கண்காணிப்பதற்கான நவீன வழிமுறைகள் போன்றவற்றை பார்வையிட்டு, அவற்றின் செயல்பாடுகளை போர்க்கால வேகத்தில் முடுக்கி விட்டு விட்டு...

இந்த நாள் இன்னும் முடியவில்லை... மக்களுக்காக ஓடிக் கொண்டே... உழைத்துக் கொண்டே இருக்கின்றார்..!

அவருடைய இந்த நான்கே நாட்கள் நிகழ்ச்சிகளை படிப்பதற்கே நமக்கு மூச்சு முட்டுது... இந்த ஒவ்வொரு நாள் நிகழ்ச்சிகளையும் தனித்தனியே கணக்கிட்டால்... ஒரு நாளைக்கு சராசரியாக 12 லிருந்து 15 மணி நேரங்கள் அவர் மக்களுக்காக உழைத்துக் கொண்டிருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது.

இதற்கிடையில், இந்த நான்கு நாட்களும்... இவருக்கு ஏன் துணை முதல்வர் பதவி என்று கேட்டு தமிழ்நாட்டின் எதிர்க் கட்சித் தலைவர்கள் மற்றும் ஸோ கால்ட் மூத்(திர)த பத்திரிக்கையாளர்கள் எல்லாம் மாய்ந்து மாய்ந்து பேசிக் கொண்டும்... எழுதிக் கொண்டும் இருக்க... அவர்களுக்கு வேக வேகமாக பதில் சொல்வதை விடுத்து... இவர் வேக வேகமாக மக்களுக்கு உழைக்க ஓடிக் கொண்டிருக்கின்றார்..!

ஸோ... அந்த ஆந்திரா காமெடியன் சொல்வது போல இவர் வீழவே மாட்டார்...

காரணம், இவர் மக்களுக்காக, மக்களுடன், மக்களாகவே உழைத்துக் கொண்டிருக்கின்றார்.

சாமி, பூதம், லட்டு, கொழுப்பு, மூத்திரம், மிரட்டல் என்று துணை முதலமைச்சர் பொறுப்பை ஏற்றுக் கொண்டு.... மக்களுக்கு கிஞ்சிற்றும் பலனில்லாத வெட்டி வேலைகளில் ஈடுபடவில்லை...!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் முன்னிலையில்! டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ தலைமையில்!

# மீஞ்சூரில் முன்னாள் அமைச்சர் மறைந்த க.சுந்தரம் திருவுருவப்படம்!

## அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார்!

திருவள்ளூர், அக்.05

திருவள்ளூர் மாவட்டம் மீஞ்சூரில் கடந்த 18தேதி முன்னாள் கழக துணை பொதுச் செயலாளரும் முன்னாள் அமைச்சரும் ஆதிதிராவிடர் நலக்குழு அணி தலைவருமான கா.சுந்தரம் உடல்நலம் பாதிக்கப்பட்டு காலமானார் அவருடைய மறைவை கேட்டு தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவருடைய உடலுக்கு நேரடியாக சென்று அஞ்சலி செலுத்தி அவருடைய குடும்பத்தாருக்கு ஆறுதல் கூறினார்.

பின்னர் க.சுந்தரத்தின் படத்திறப்பு நிகழ்ச்சி மீஞ்சூர் பேரூர் கழக செயலாளர் க.சு. தமிழ் உதயன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

மாவட்ட கழக செயலாளர் டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமை வகித்தார். மாநில ஆதிதிராவிட நலக்குழு அணி செயலாளர் ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ துவக்க உரை நிகத்தினார்.

இந்நிகழ்ச்சியில் கழக முதன்மைச் செயலாளரும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் கே.என்.நேரு கலந்துகொண்டு திருவுருவ படத்தினை திறந்து வைத்து புகழ் அஞ்சலி செலுத்தினார்.

அமைச்சர் ஆவடி சாமு. நாசர் முன்னிலையில் கா. சுந்தரம் அவர்கள் 1989 முதல் 2001 வரை முத்தமிழ் அறிஞர் கலைஞருடன் அமைச்சராக பணியாற்றிய புகைப்படங்களை கண்காட்சிகாக அமைக்கப்பட்ட முகாமை திறந்து வைத்து பார்வையிட்டார்கள்.

இந்நிகழ்ச்சியில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் அந்தியூர் செல்வராஜ் எம்.பி, அமைச்சர்கள் கே. ஆர்.பெரியகருப்பன், ஆர். காந்தி, சி.வி.கணேசன், எம்.மதிவேந்தன், சட்ட திட்ட திருத்த குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி, சமத்துவ மக்கள் கழக நிறுவனர் எர்ணாவூர் நாராயணன், திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ, பொன்னேரி சட்டமன்ற உறுப்பினர் துரை சந்திரசேகரன் , திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.சங்கர் எம்.எல்.ஏ, சென்னை துணை மேயர் மகேஷ், முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் இ.ஏ.பி.சிவாஜி,

மாநில ஆதிதிராவிட நலக்குழு அணி நிர்வாகிகள் விபி.ராசன், திப்பம்பட்டி ஆறுசாமி, சா.ராஜேந்திரன், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, அன்புவண்ணன், மு.பகலவன், மா.ராஜ், மு.கதிரவன், எஸ். ரமேஷ், கே.சுப்பிரமணி, பரிமளம் விஸ்வநாதன், பா.செ.குணசேகரன், ஒன்றிய நகர பேரூர் கழகச் செயலாளர்கள் எம்.எஸ்.கே. ரமேஷ்ராஜ், பா.சுகுமாறன்,கா.சு.ஜெகதீசன், மு.மணிபாலன், நா. செல்வசேகரன், கே.வி. ஆனந்தகுமார், டி.கே.சந்திரசேகர், ஆ.சத்தியவேலு, ஜான்(எ)பொன்னுசாமி, ந.பரிமளம், ஜி.ரவிக்குமார் இரா.அறிவழகன், அபிராமிகுமரவேல், பி.முத்து, ஜி.ரவி தமிழ்ச்செல்வி பூமிநாதன், மீ.வி.கோதண்டம், ருக்மணி மோகன்ராஜ், ப.அலெக்சாண்டர், மீஞ்சூர் பேரூர் கழக நிர்வாகிகள் ஜி.ராஜேந்திரன், கே.எஸ். லெனின், கே.சசிகுமார், கே.மணிமாறன், வ.மோகன், எஸ்.கணேஷ், ஜோதி ஸ்ரீதரன், டில்லி, இ.சாமிவேல், கு.அன்சர்பாஷா, புருஷோத்தமன், மதன்குமார்,

மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அணி நிர்வாகிகள் கா.சம்பத், சி.நாகராஜன், பா.முத்துசாமி, ஜி.கோபி, எம்.அருள், மீ.மு.ராமகிருஷ்ணன்,

எஸ்.முருகானந்தம், இ.கோதண்டன், இ.பழனி, டி.கே.பழனி, எம்.முனிநாதன்,

ஜெ.மனோஜ்குமார், டி.பிரபாகரன், எஸ்.ஏசுராஜன், நெல்சன் சந்துரு, ஜெ.எஸ்.கன்னிமுத்து, கோளூர் கே.கோபால், குடும்பத்தினர் எழிலினி சுந்தரம், டாக்டர் க.சு.செந்தில் ராஜ்குமார், பொறியாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் க.சு.தமிழ்பிரியன், உள்பட பலர் உள்ளனர்.